1751

MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

SIXTH SESSION OF THE THIRD LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

19th to 23rd January 1965.

Volume XXV (Nos. 1 to 5).

TABLE OF CONTENTS.

Tuesday, 19th January 1965.

	PAGES.
I Obituary Reference to Sri R. S. Veerappa Chettiar, M.L.A. and Sri H. C. Dasappa, Union Minister for Industry and Supply	1
II Questions and Answers	1–19
III Adjournment Motions—	
(1) Loss of life and damage to property due to cyclone in Dhanushkodi	19
(2) Police firing on students of Scott Christian College, Nagercoil	19–20
(3) Relief to ryots in certain cyclone-affected districts .	20
IV Government Motions—	
(1) Suspension of Rule 41 (3)	20–2
(2) Election to Committee on Estimates	39
V Calling attention to Matters of Urgent Public Importance—	
(1) Damages caused due to cyclone and heavy rains in Rameswaram and Dhanushkodi	23–33
(2) Police firing on students of Scott Christian College, Nagercoil	33–35
(3) Police firing on refugees in Coimbatore district ..	36–37
VI Announcements—	
(1) Business of the House	37–38
(2) Panel of Chairmen	38
(3) The Madras Contingency Fund (Amendment) Bill, 1965	93

800 009
V21,31 'M65
M65.251
1379664

Tuesday, 19*th January* 1965—cont.

PAGES.

VII Privilege Matter—
Propriety of making comments to the Press on the Governor's Address 39-43

VIII Third Supplementary Statement of Expenditure for 1964-65—Presentation 43-46

IX Discussion on the Governor's Address 46-93

X Government Bill—
The Madras Contingency Fund (Amendment) Bill, 1965 .. 93-99

XI Papers laid on the Table of the House 100-111

Wednesday, 20*th January* 1965.

I Questions and Answers 117-142

II Discussion on the Governor's Address—*cont*: 143-211

III Papers laid on the Table of the House 211

Thursday, 21*st January* 1965.

I Questions and Answers 219-245

II Calling Attention to outbreak of epidemics in North Arcot District 245-246

III Use of Unparliamentary Expressions in the House 246-247
310-312

IV Third Supplementary Statement of Expenditure for 1964-65—General Discussion 247-310

V Voting on Demands for Grants for further Expenditure in 1964-65 .. ..

A.—EXPENDITURE ON REVENUE ACCOUNT.

Demand No. I—Land Revenue Department 312

Demand No. II—Motor Vehicles Act—Administration ..
Demand No. III—General Sales Tax and other Taxes and Duties Administration .. ..
Demand No. VIII—Head of State, Ministers and Headquarters staff 313
Demand No. IX—District Administration and Miscellaneous .. ..
Demand No. XI—Jails .. ..

Demand No. XII—Police .. ..
Demand No. XIII—Education .. ..
Demand No. XIV—Medical 314
Demand No. XV—Public Health .. ..
Demand No. XVI—Agriculture .. ..

Demand No. XVII—Fisheries .. ..
Demand No. XVIII—Animal Husbandry .. .. ..
Demand No. XIX—Co-operation .. ..
Demand No. XX—Industries 315
Demand No. XXIII—Community Development Projects, National Extension Service and Local Development Works .. ..

PAGES.

Thursday, 21*st January* 1965—cont.

A.—EXPENDITURE ON REVENUE ACCOUNT—*cont.*

Demand No. XXIV—Labour including Factories .. ..
Demand No. XXV—Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes .. ..
Demand No. XXVI—Irrigation .. .. } 316
Demand No. XXVII—Public Works—Works .. ..
Demand No. XXVIII—Public Works—Establishment and Tools and Plant .. ..

Demand No. XXIX—Public Works—Grants-in-aid .
Demand No. XXX—Road Transport Schemes .. ..
Demand No. XXXI—Famine Relief .. .. .. } 317
Demand No. XXXIII—Miscellaneous ....
Demand No. XXXIV—Stationery and Printing .. ..

B.—EXPENDITURE ON CAPITAL ACCOUNT.

Demand No. XXXIX—Capital Outlay on Agriculture .. 317
Demand No. XXXIX—A. Capital Outlay on Consumers Co-operatives .. ..
Demand No. XL—Capital Outlay on Industrial Development .. .. } 318
Demand No. XLI—Capital Outlay on Irrigation .. ..
Demand No. XLII—Capital Outlay on Public Works ..
Demand No. XLIII—Capital Outlay on Road Transport Schemes .. ..

Demand No. XLVI—Capital Outlay on Schemes of Government Trading 319–520

Demand No. XLVI—A. Appropriation to the Contingency Fund 321

C.—EXPENDITURE ON LOAN ACCOUNT.

Demand No. XLVII—Loans and Advances by the State Government 321

VI Announcement—

The Madras Appropriation Bill, 1965 321

VII Government Bill—

The Madras Appropriation Bill, 1965 321–322

VIII Papers laid on the Table of the House 322

Friday, 22*nd January* 1965.

I Questions and Answers 321–34 3

II Adjournment Motions—

(1) Alleged Failure of Government to take steps to prevent Hindi becoming Official Language of the Union .. 343–345

(2) Stay of Panchayat Elections in Singanallur Panchayat Block 345–346

III Role of the Speaker 346–347

IV Use of Unparliamentary Expressions in the House 347–348

V Calling Attention Notices 348–349

VI Discussion on the Governor's Address—*cont.* 349–418

VII Government Bills—

(1) The Madras Cultivating Tenants' Protection (Continuance) Bill, 1965 418–444

PAGES.

Friday, 22nd January 1965—cont.

VII Government Bills—*cont.*

(2) The Madras Places of Public Resort (Amendment) Bill, 1964 (L.A. Bill No. 12 of 1964) 445-448
(3) The Madras Tenancy (Amendment) Bill, 1965 448-454
(4) The Madras Land Improvement Schemes (Amendment) Bill, 1964 454-457

VIII Government Motions—

(1) Change in the Order of Business 448
(2) Notification under the Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 457-458

IX Non-official Business—

Amendment to the Conduct of Election of Members of Village Panchayat Rules, 1964 458-468

X Papers laid on the Table of the House 468

Saturday, 23rd January 1965.

I Questions and Answers 471-509

II Points of Order—

(1) Alleged attack on the Dravida Munnetra Kazhagam by the Chief Minister in public speech 509-510
(2) Delay in furnishing information by the departments .. 517-518

III Adjournment Motion—

Lockout in the Southern Structurals, Limited, Pattabiram 510-511

IV Use of Unparliamentary Expressions in the House 511-512

V Privilege Matter—

Alleged delay in the implementation of four land tenure Acts 512-514

VI Calling Attention to the need for remission of land revenue in Tiruvadanai taluk 515

VII Announcements—

(1) Election to the Committee on Estimates 515
(2) The Madras General Sales Tax (Amendment) Bill, 1965 515
(3) Letter from Sri T. Hanumanthappa, former Secretary, Madras Legislative Assembly 599

VIII Government Bills—

(1) The Madras General Sales Tax (Amendment) Bill, 1965 515-516
(2) The Madras Appropriation Bill, 1965 (L.A. Bill No. 2 of 1965) 516-517

IX Government Motion—

Change in the order of Business 516

X Government Resolution—

Constitution of a Township for the Shevaroys Panchayat Town 518-521

XI Discussion on the Governor's Address—*cont.* 521-599

XII Papers laid on the Table of the House 600

How to use the Index.

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the sub-headings are indented from the Main Headings.

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject-matter within brackets. e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question. In the case of Bills and Financial Business, the entry will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the Main Heading 'Bill(s)'.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc, are consolidated under the said Main Headings, i.e., "Committee(s)," 'Council(s)', 'Corporation(s)', etc.

Various Schools, Colleges, Conferences, Ports, Temples, and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the Main heading "Papers Laid on the Table".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading "Chair".

A list of abbreviations used in the Index is given below :—

A.M./Ad. Motion	Adjournment Motion.
Ann.	Announcement.
B.O.H.	Business of the House.
C.A.	Calling Attention to a matter of Urgent Public Importance.
C.A. St.	Calling Attention Statement.
Consid.	Consideration stage of a Bill. This stage includes :
	(i) Motion to refer to Select/Joint Select Committee.
	(ii) Amendment to refer to Select/Joint Select Committee.
	(iii) Amendment to circulate.
	(iv) Motion to consider as reported by Select/Joint Select Committee.
	(v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc.
Consid. Cl.	Consideration of clauses of a Bill.
D.E.E.	Demands for Excess Expenditure.
Dis. S.D.	Discussion for Short Duration on an urgent matter of Administration.

D.S.G.	Demands for Supplementary Grants
G.A.	Governor's. Address.
G.D.	General Discussion.
H.A.H. Dis./H.H.D. ..	Half-hour Discussion.
Int.	Introduction stage of a Bill.
L.A.	Legislative Assembly.
L.C.	Legislative Council.
M.	Motion.
P.M.	Privilege Motion.
R/Res	Resolution.
St.	Statement.

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Thursday, 21st January 1965.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, Mr. SPEAKER (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

D.M.K's. proposed programme to observe day of mourning.

* 1 S.N. *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that the D.M.K. has programmed to observe 26—1—1965 as a day of mourning and sorrow; and

(*b*) if so, the action proposed to be taken thereon ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) The Government will take appropriate action, though it will not be in public interest to disclose the details at this stage.

திரு. வை. சங்கரன்: கனம் சபாநாயகர் அவர்களே, இவ்வாறு திராவிட முன்னேற்றக் கழகம் செய்ய முற்பட்டுள்ள செய்கையானது இந்தியக் குடியரசுக்கு அவமதிப்புக் காட்டப்படுவதாகும். இந்திய நாட்டிடம் மதிப்பும், மரியாதையும், விசுவாசமும் கொண்ட இந்திய மக்களின் மனதைப் புண்படுத்துவதாக ஆகாதா? அரசாங்கம் முன்கூட்டியே இதைத் தடை செய்தும், மீறி நடக்கின்றவர்களைக் கைது செய்து தேசத் துரோகக் குற்றத்திற்காக அவர்களைத் தண்டிக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இது முற்றிலும் தவறு என்பதுதான் அரசாங்கத்தின் கருத்து. இதிலே என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவது என்பதிலே அரசாங்கம் முடிவு செய்து எடுத்துக்கொள்ளும். கனம் அங்கத்தினர் குறிப்பிடுகிற வகையிலே நடந்துகொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கக் கூடாது. உசிதமான நடவடிக்கைகள் என்ன எடுக்கவேண்டுமோ அவைகளையெல்லாம் அரசாங்கம் எடுத்துக்கொள்ளும்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, ஜனவரி 26-ந் தேதியை திராவிட முன்னேற்றக் கழகம் துக்க நாளாகக் கொண்டாடுவது குடியரசு நாளை அவமதிக்கவேண்டுமென்ற நோக்கமல்ல என்பதையும், சென்ற பதினைந்து ஆண்டு காலமாக அந்த நாளை மதித்து வந்திருக்கிறது என்பதையும், இந்தி திணிக்கப்படுவதைத்தான் துக்க நாளாகக் கொண்டாடுகிறது என்பதையும் கனம் முதல் அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு சமாதானம் கூறலாம். நானும் அரசாங்கமும் அவ்வாறு ஒப்புக்கொள்ள முடியாது. ஜனவரி 26-ம் தேதி புனிதமான நாள் —குடியரசு நாள். குடியரசு தினத்தில் துக்கம் கொண்டாடுவது என்பது முற்றிலும் தவறு. அந்த நாளில் துக்கம் கொண்டாடுவது என்பது குடியரசுக்குத் துரோக மனப்பான்மையைக் காட்டுவதாகத்தான் ஆகும். இதற்காகத் துக்கப்படுகிறார்கள் என்றால் 25-ம் தேதியே துக்கம் கொண்டாடலாம், மறு நாள் வருகிறதே என்று, அல்லது அதற்கு மறு நாள் வந்து விட்டதே என்று 27-ம் தேதி துக்க நாள் கொண்டாடலாம். 26-ம் தேதி துக்க நாள் கொண்டாடுவது என்பது முற்றிலும் தவறு. இதை அரசாங்கம் அனுமதிக்க முடியாது.

திரு. வை. சங்கரன்: திராவிட முன்னேற்றக் கழகத்தின் உள் நோக்கம் எவ்வாறு இருந்தாலும், நடக்கக்கூடிய நடவடிக்கை அவ்வாறு இல்லை. ஒரு கலியாண வீட்டில் எதையாவது நினைத்துக் கொண்டு அழுதாலும் அது தப்பாகத்தான் இருக்கும். ஆகையால் அதைத் தடை செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: உள் நோக்கம், வெளி நோக்கம் ஒன்றும் இல்லை. நடத்தையைக் கொண்டு அபிப்பிராயம் கொள்ள வேண்டும். அவர்களுடைய நடவடிக்கை சரியல்ல என்று சொன்னேன். அதை அரசாங்கம் பார்த்துக் கொண்டிராது என்றும் சொன்னேன். அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளும் என்று மீண்டும் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. கரு. சிமைச்சாமி: தலைவர் அவர்களே, அமைதிக்கு பங்கம் விளைவிக்காமல் திராவிட முன்னேற்றக் கழகம் ஜனவரி 26-ம் தேதி இந்தித் திணிப்பைப் பற்றி எதிர்ப்புத் தெரிவித்தால் அரசு அப்போதும் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இது அமைதி விஷயம் அல்ல. அமைதி விஷயம் வேறு விஷயம். அதற்கும் நடவடிக்கை எடுத்து கொள்ளும். அமைதியாக துக்கம் கொண்டாடுகிறோம் என்றாலும் அரசாங்கம் பொறுத்துக்கொள்ள முடியாது. கனம் அங்கத்தினர் சுதந்திரா கட்சி உறுப்பினர். சுதந்திரா கட்சித் தலைவர் அவர்கள், கவனிக்காமலேயே ஒன்று கூறிவிட்டார்கள். அதை நினைவு படுத்த விரும்புகிறேன். நேற்று . . .(திரு. மீ. கலியாணசுந்தரம் குறுக்கிடு) அவருக்குக் கெடுதல் .... நல்லதல்ல .... நேற்று கூறியது என்னவென்றால், இவ்வாறு துக்கம் கொண்டாடுகிறார்களே, சினுக்காரர்கள் பயன்படுத்திக்கொள்ள மாட்டார்களா என்று கூறினார்கள். அதிலே அவர்கள் கருத்து பொதிந்திருக்கிறது. சினுக்காரர்கள் பயன்படுத்திக்கொள்ளட்டும் என்ற கருத்து தொனிக்கிறது சுதந்திரா கட்சி தலைவர் பேச்சிலே. அதனால்தான் தன்னை உணராமல் சொல்லிவிட்டார் என்று சொன்னேன்.

21st January 1965]

திரு. ர. ஜீவரத்னம்: ஜனவரி 26-ம் தேதி துக்க தினம் கொண்டாடுவதைப் பற்றி கொடியேற்று விழா செய்தாலோ அல்லது பொதுக்கூட்டம் நடத்தினாலோ அவைகளைத் தடுத்து விடுவார்கள் என்று கருப்புச் சட்டைகளே இப்போது தைத்து வைத்திருக்கிறார்கள். கருப்புச் சட்டை அணிந்து வந்தால் பெரிய சூழ்பம் ஏற்படும். ஆகையால் கருப்புச் சட்டை அணிந்து வருவதைத் தடை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: திராவிட முன்னேற்றக் கழகத்தின் திட்டத்தைப்பற்றி எனக்குத் தெரியாது. நான் முன்பே கூறியது போல அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுத்து கொள்ளும்.

திரு. டி. கார்ச்சா கவுடர்: ஜனவரி 26-ம் தேதி நாடு பூராவிலும் கோலாகலமாகக் குடியரசு தினத்தைக் கொண்டாடும்போது தமிழ் நாட்டிலுள்ள ஒரு சிறு பிரிவினர் துக்க நாள் கொண்டாடினால் தமிழர்களுடைய மதிப்பு இந்தியாவிலேயும், உலகத்திலேயும் குறைந்து விடாதா? இதைத் தடுக்க தகுந்த நடவடிக்கை எடுப்பார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஒரு சிலர் தவறுக நடந்து கொள்வதால் தமிழர் மதிப்பு குறைந்து விடாது. இந்த மாதிரி எப்போதும் என்றைக்கும் உள்ளது. ஆனால், அன்று அவர்களுக்கு துக்கம் வரலாம். ஏதாவது துக்கம் வந்தாலும் வீட்டிலேயே இருந்து துக்கம் கொண்டாடலாம்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: லார், துக்க தினம் கொண்டாடுவதைத் தடுக்கும் பெயரால் மற்றக் கட்சிகள் நடத்தும் கூட்டத்தையும் ஊர்வலத்தையும் கூட தடுக்காமல் இருப்பார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: துக்கம் கொண்டாடுவதைப் பற்றி என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் போகிறோம் என்று சொல்லவில்லை. தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளப் போகிறோம் என்று சொன்னேன். கனம் அங்கத்தினர் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர். கம்யூனிஸ்ட் கட்சியிலே வலது சாரிக் கட்சியைச் சேர்ந்தவர் (திரு. மீ. கலியாணசுந்தரம் குறுக்கிடு) அது எனக்குத் தெரியாது. அவர்கள் சுதந்திர தினத்தை ஒழுங்காகக் கொண்டாடுவார்கள் என்று எனக்குத் தெரியும். அதற்கு அவர்கள் அச்சப்பட வேண்டியதில்லை.

திரு. கே. ஏ. மதியழகன்: தலைவர் அவர்களே, ஜனவரி 26-ம் தேதி அன்று இந்தி இந்திய யூனியனுடைய ஆட்சி மொழியாவது நிர்வாகச் சீர் குலைவையும், ஒரு மொழியினுடைய ஆதிக்கத்தையும், நம்முடைய தமிழ் மொழி போன்ற மொழிகளின் அழிவையும் செய்யும் என்பது நமது மாநில மக்களில் பெரும் பாலானவர்களின் கருத்து. இத்தக் கருத்து அடிப்படையில் இப்போது இருக்கிற அரசியல் சட்டத்தில் 17-வது பிரிவினை ஸஸ்பெண்ட் செய்யவேண்டும் என்பதற்கு இந்த மாநிலம் மத்திய சர்க்காரை வற்புறுத்தியதா? அல்லது இனியாவது வற்புறுத்துமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பெரும்பாலானவர்கள் கருத்து என்பதைக் கனம் அங்கத்தினர் கொள்ளலாம். அதை நான் ஏற்றுக் கொள்ளமுடியாது. கனம் அங்கத்தினர் போன்ற சில பேர் களுடைய போக்குத்தான் இது—விபரீதமான போக்கு. அரசியல் சட்டத்திலே எந்தப் பிரிவின் மீது எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டு மென்று இதைச் செய்கிறார்களோ, அது என்று நிறைவேற்ற பட்டதோ அன்றைக்குக் கொண்டாடியிருக்கவேண்டும். பின்னால் அரசியல் சட்டம் திருத்தப்பட்டது. இந்தி மட்டும் அல்ல ஆங்கிலமும் தொடர்ந்து காலவரம்பின்றி இருக்கும் என்று திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது. திருத்தி அமைக்கப்பட்ட சட்டம் தான் இப்போது அமலுக்கு வருகிறது. அதைப்பற்றி வருந்து வதற்கோ, துக்கம் கொண்டாடுவதற்கோ கொஞ்சம் கூட இடம் இடையாது.

திரு. வை. சங்கரன் : அமைதிக்கு பங்கம் விளைவிக்காவிடினும் இது போன்ற செயல்கள் அனுமதிக்கப்பட்டு விட்டால் இதுவே ப்ரீடெண்ட்டாகி, இது போன்ற சுதந்திர தினம், தேசத் தலைவர் கள் தினம் இவைகளை எல்லாம் தேச விரோதச் செயல்களிலும், தேசத் துரோகச் செயல்களிலும் ஈடுபடுவதற்குத் தீய சக்திகள் உபயோக படுத்திக் கொள்ளக்கூடும் என்ற காரணத்தினால் அரசாங்கம் போதிய நடவடிக்கைகளை முன் கூட்டியே எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சாதாரணமாக அரசாங்கம் அல்லது அரசாங்க அதிகாரிகள் தலையிடுவது அமைதிக்கு பங்கம் விளைவிக்குமாயின் தடுக்க. நான் முன்பே கூறினேன், அமைதிக்கு பங்கம் விளைவிக்காத முறையில் ஈடுபட்டாலும் இதற்குச் சற்றும் இடம் கொடுக்கமாட்டோம் என்று கூறினேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் முதல் அமைச்சர் அவர்கள் கூறியதிலிருந்து எப்படி மத்திய அரசாங்க அலுவலகங்களில் குறிப்புகள் ஆங்கிலத்திலும் எழுதலாம், இந்தியிலும் எழுதலாம் என்று இருக்கிறதோ, அதே போன்று நம்முடைய மாநில அரசாங்க அலுவலகங்களிலும் குறிப்புகள் ஆங்கிலத்திலும் எழுத லாம், தமிழிலும் எழுதலாம் என்று உத்திரவிடுவார்களா ?

Mr. SPEAKER : This question refers to a different point.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு இப்பொழுது ஒன்றும் புதியதாக உத்தரவிடுவதாக உத்தேசம் இல்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : இப்பொழுது ஏற்பட்டிருக்கிற மொழிச் சட்டப்படி இந்தி மட்டுமல்ல, ஆங்கிலமும் தொடர்ந்து இருக்கும் என்று கனம் முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார் கள். எனக்குத் தெரிந்த சட்டப்படி இந்தி ஒன்றுதான் ஆட்சி மொழி. சில காரியங்களுக்காக ஆங்கிலம் பயன்படுத்தலாம். அதுவும் 1975-ம் வருஷம் வரையிலும் அந்த மொழிச் சட்டம் இருக்கிறது. ஆங்கிலம் எப்பொழுதுமே கால வரையின்றி இருக்கும் என்று எந்த விதிப்படி முதல் அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள்?

21st January 1965]

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் அங்கத்தினர் அவர்கள் சட்டத்தை புரிந்துகொள்ளவில்லை என்றால், என்னால் விளக்க முடியாது. காலவரம்பின்றி ஆங்கிலமும் இருக்கும். இந்தி எப்படி மத்திய சர்க்கார் அரசாங்க மொழியாக இருக்கிறதோ அதே மாதிரி ஆங்கிலமும் இருக்கும்.

திரு. கே. ஏ. மதியழகன்: இந்தி ஆட்சிமொழி. ஆங்கிலம் may be used for certain purposes என்றுதான் அந்த மொழிச் சட்டத்தில் இருக்கிறது. ஆங்கிலம் ஆட்சி மொழியாக இல்லை. ஆங்கிலமும் ஒரு மொழி. அதுவும் 1975-ம் வருஷம் வரையில்தான். அதற்குப் பிறகு அதைப் பரிசீலிக்க ஒரு கமிட்டி, ஆயத்து வேறு இருக்கிறது. இதை முதல் அமைச்சர் அவர்கள் மறுக்கிறார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: 1975-ம் வருஷத்தில் ஆயத்து ஒன்றுமில்லை. இந்தி எப்படி இருக்கிறதோ, அதே மாதிரிதான் ஆங்கிலமும் இருக்கும். அந்த முறையில்தான் 26-ம் தேதி அமலுக்கு வருகிற சட்டம் இருக்கிறது.

திரு. எஸ். பொன்னுசாமி: குடியரசு தினம் நமக்கு பொது முக்கியத்துவம் வாய்ந்த தினம். அந்தச் சந்தர்ப்பத்தில் எதிர்க் கட்சியினர் இப்போர்ப்பட்ட ஆர்பாட்டம் செய்வது தகாது என்று மக்கள் இப்பொழுதே மிகுந்த பரபரப்பு காட்டுகிறார்கள். ஆகவே, அவர்களுக்கு எச்சரிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இப்பொழுது நான் இந்த மன்றத்தில் கூறியிருக்கிறேன். அதுதான் எச்சரிக்கை.

திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்: ஸார், குடியரசு தினத்தன்று இந்த இந்தி மொழியைக் கொண்டுவருவதால்தான் இவ்வளவு பெரிய சிக்கல் ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் உணர்கிறோம். ஆகவே, இந்திய சர்க்காரிடம் சொல்லி இந்த இந்தி மொழி கொண்டு வருவதை ஒத்தி வைத்தால், இந்த சிக்கல் ஓரளவுக்கு நீங்குமே? அதைச் செய்ய இந்தச் சர்க்கார் முன் வருவார்களா?

கனம் திரு. எம் பக்தவத்சலம்: கனம் உறுப்பினர் அவர்கள் சுதந்திரா கட்சி உறுப்பினர். அந்த சுதந்திரா கட்சித் தலைவர்தான் இந்தக் கருத்தை இப்பொழுது புதியதாகச் சொல்லுகிறார். அதைத்தான் சுதந்திரா கட்சியும், திராவிட முன்னேற்றக் கழகத்தினரும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆங்கிலம் கூட இல்லாமல் இந்தி ஆட்சி மொழி ஆகும் என்று அரசியல் சட்டம் நிறைவேற்றப் பட்டபொழுது, அந்த சுதந்திரா கட்சித் தலைவர் அவர்கள் அதை எதிர்க்கவில்லை. மேலும், இந்த மன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களும் இருந்தார்கள். அப்பொழுது இந்தியோடு ஆங்கிலமும் இருக்கும் என்ற ஒரு தீர்மானமும் இங்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறது கனம் அங்கத்தினர்களுக்கு நினைவு இருக்கும்.

திரு. கரு. சீமைச்சாமி : குடியரசு தினத்திற்காக துக்கம் இல்லே. இந்தி ஆட்சி மொழியாவது பற்றிதான் அன்று துக்க தினமாகக் கொண்டாடப்படும் என்று கனம் எதிர்க்கட்சித் தலேவர் அவர்கள் சொன்னர்கள். அமைதியாகக் கொண்டாடினலும் நடவடிக்கை எடுக்கப் போவதாக முதல் அமைச்சர் அவர்கள் சொன்னர்கள். அமைதியாகக் கொண்டாடினலும், அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது பழி வாங்கும் நோக்கமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பழி வாங்கும் நோக்கம் ஒன்று மில்லே. ஒரு வீட்டில் திருமணம் நடந்துகொண்டிருக்கும்பொழுது விருந்தாளியாக வந்தவர்களில் ஒருவர் எதையோ நினேத்துக் கொண்டு அழ ஆரம்பித்தால் அதை யாரும் அனுமதிக்கமாட்டார் கள். அவரை வீட்டைவிட்டு வெளியே அப்புறப்படுத்தி விடுவார்கள்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : வங்காள அரசாங்கம் முன்பு ஒரு தடவை ஜனவரி 26-ம் தேதி அன்று துக்கம் அனுஷ்டித்தார் கள். பெருபாரி முதலிய கிராமங்களே பாகிஸ்தானுடன் சேர்த்த தற்காக அந்த அரசாங்கமே, ஒரு நிபந்தனேயின் பேரில் அதை துக்க தினமாகக் கொண்டாடினர். அதைப் போலவே நமது அரசாங்கமும் இந்தி மொழி திக்கலில் முன் நின்று, ஆங்கிலத் தையே என் வைத்துக்கொள்ளக் கூடாது என்று அறிய விரும்பு கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : வேறு யாரும், எந்த மாதிலமும் 26-ம் தேதியன்று துக்க தினம் கொண்டாடியதாக எனக்குத் தெரியாது. இங்கு யார் கொண்டாடினலும், இந்த அரசாங்கம் அனுமதிக்காது.

திரு. ர. ஜீவரத்னம் : கனம் தலேவர் அவர்களே, இந்திய மக்க ளால் இயற்றப்பட்டது இந்திய அரசியல் அமைப்புச் சட்டம். இந்த அரசியல் அமைப்புச் சட்டத்தில் இந்தி இந்த தேசத்தி னுடைய மொழி என்று இயற்றப்பட்டிருக்கிறது. இந்த அரசியல் அமைப்புச் சட்டத்தின் பெயரால் தான் திராவிட முன்னேற்றக் கழகத்தினர், சுதந்திராக் கட்சியினர் இந்த சபைக்கு வந்திருக் கிறார்கள். அந்தச் சட்டத்திற்கு உட்பட்டு நடப்பதாக விசுவாசப் பிரமாணம் கூட எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது இந்தியை எதிர்த்து குடியரசு தினத்தை துக்க நாளாகக் கொண்டாட இருக்கிறார்கள். ஆகவே, அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு விரோதமாக, அம்மாதிரி சட்ட விரோதமாக, நடந்து கொள்கிற அங்கத்தினர்களே இந்த சட்ட சபையிலிருந்து விலக்க கனம் முதல் அமைச்சர் அவர்கள் ஏதாகிலும் தீர்மானம் கொண்டு வருவார்களா ? (எதிர்க்கட்சி தரப்பிலிருந்து சிரிப்பு).

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதிலே சிரிப்பதற்கு இடமில்லே. இது அழுவதற்கான ஒரு பிரச்னே. கனம் அங்கத்தினர் அவர்கள் ஏதோ கேட்டார்கள். என்ன நடவடிக்கை அரசாங்கம் எடுத்துக் கொள்ளும் என்று நான் சொன்னேன். ஆனல், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுக்கு என்ன தோன்றுகிறதோ அதையெல்லாம் செய்யலாம். அவர்களுக்கே அதை விட்டுவிடு

21st January 1965]

கிறேன். அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ் இங்கு வந்திருக்கலாம். அது வேறு விஷயம். பகிரங்கமாக ஏதாவது செய்வதைத் தான் நாம் அனுமதிக்க முடியாது என்று சொன்னேன்.

திரு. இராம. அரங்கண்ணல் : இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு அடங்கியும், குடியரசு தினத்தை கடந்த 16 ஆண்டு காலம் மதித்தும், நடந்துகொண்டிருக்கிறோம். இந்த ஆண்டு கூட நாங்கள் மதிப்பதற்கு, அந்த விழாக்களில் கலந்து கொள்வதற்கு தயாராக இருக்கிறோம். குடியரசு தினத்தின் மீது இருக்கிற அந்த உணர்வின் காரணமாக, நமது அரசாங்கம் ஜனவரி 26-ம் தேதியன்று இந்தியை புகுத்தாமல், வேறு தினத்தன்று புகுத்துமாறு டெல்லி அரசை வற்புறுத்தலாம் அல்லவா?

Mr. SPEAKER : This Constitution came into force on the 26th January 1950. Now 15 years is over. Unless the Constitution is amended, I think that we cannot change the date.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் உறுப்பினர் அவர்கள் ஏதோ இப்படிச் செய்தால், பெரிய மனது பண்ணி தாங்கள் குடியரசு தினத்தை ஆதரிக்கிறோம் என்று சொன்னார்கள். அவர்கள் ஆதரவு இல்லாமலே குடியரசு தினத்தை மக்கள் கொண்டாடுவார்கள். அதைப்பற்றிக் கவலையில்லை. அரசியல் அமைப்புச் சட்டத்தை மாற்றி அமைப்பது பற்றித் தாங்கள் குறிப்பிட்டீர்கள். ஏதோ பெரிய மனது பண்ணுவது போல் இப்படிச் செய்தால், அப்படிச் செய்வோம் என்று சொல்லுகிறார்கள். 'நீங்கள் மத்திய சர்க்காருக்கு எழுதினால், நாங்கள் பெரிய மனது பண்ணி குடியரசு தினத்தைக் கொண்டாடுவோம்' என்று சொல்லுகிறார்கள். அதைப்பற்றி இந்த அரசாங்கம் சற்றும் பொருட்படுத்தாது.

திரு. இராம. அரங்கண்ணல் : பெரிய மனது பண்ணி நாங்கள் ஒன்றும் சொல்லவில்லை. நாங்கள் எல்லாம் சிறுவர்கள்தான். பெரிய மனது பண்ண வேண்டுமென்ற எண்ணத்தோடு சொல்லவில்லை. இருதய சுத்தியோடு தான் நாங்கள் சொல்லுகிறோம். சுதந்திர தினத்தை நாங்கள் மதிக்கிறோம், குடியரசு தினத்தை நாங்கள் மதிக்கிறோம், இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை நாங்கள் மதிக்கிறோம். ஆனால், இந்த ஜனவரி 26-ம் தேதி நாங்கள் காட்டுகிற எதிர்ப்பு இந்தி திணிப்பு என்பதற்காகவே தவிர, யார் மீதும் தனிப்பட்ட விரோதம் இல்லை. காங்கிரஸ் கட்சியை அவமதிக்க வேண்டுமென்ற எண்ணமும் இல்லை. குடியரசு தினத்தை அவமதிக்க வேண்டுமென்ற எண்ணமும் எங்களுக்குக் கிடையாது என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : உண்மையிலேயே குடியரசு தினத்தை சீராக மதிக்கவேண்டும், கொண்டாட வேண்டும் என்ற எண்ணம் திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கு இருந்தால், 26-ம் தேதியை விட்டுவிட்டு, 27-ம் தேதியன்று துக்க தினத்தை கொண்டாடலாம்.

திரு. எம். எஸ். மணி : ஜனவரி 26-ம் தேதி திராவிட முன்னேற்றக் கழகம் இந்தி திணிப்பைக் கண்டித்து, கருப்பு பாட்ஜுகளை அணிந்து கொண்டு, அமைதியான முறையில் பொதுக் கூட்டங்களை நடத்துவது என்று திட்டம் வகுத்திருக்கிறது. அப்படியானல் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்போம் என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். ஆகவே, கறுப்புச் சட்டை அணிந்திருக்கும் பெரியார் ராமசாமி அவர்கள் மீதும், வழக்கறிஞர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படுமா ?

(பதில் இல்லை.)

* * * * *

திரு. செ. மாதவன் : துக்க நாள் கொண்டாடி அமைதிக்கு பங்கம் விளைவித்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும், கருப்புக்கொடி கட்டினால் அனுப்போம் என்று ஒரு கட்சித் தலைவர் பகிரங்கமாக பிரசாரம் செய்துவருகிறாரே? அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அமைதிக்கு பங்கம் விளைவித்தால் நடவடிக்கை எடுப்பது வேறு விஷயம். இம்மாதிரிப் பட்ட பிரச்னை இப்பொழுது இல்லை. இதுபற்றி இன்னொருவர் சொல்லவேண்டியதில்லை. தலைவர் சொல்ல வேண்டியதில்லை. போலீஸார் இம்மாதிரி கருப்புக்கொடி கட்டுவதைப் பார்த்துக் கொண்டு இருக்கமாட்டார்கள்.

திரு. வை. சங்கரன் : கருப்புக்கொடி கட்ட முற்படுகிறவர்கள் பெரும்பாலோர் இன்றுவரை இந்திய மக்கள் என்ற முறையிலே இந்தியக் குடியரசு தினத்தையோ இந்திய சுதந்திர தினத்தையோ கொண்டாட கனவிலும்கூடக் கருதாதவர்கள் என்பது அரசாங்கத் திற்குத் தெரியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றி எல்லாம் நான் கூர்ந்து அதிகமாகக் கவனிப்பதில்லை. கொண்டாடுகிறார்களோ இல்லையோ அதைப்பற்றி அதிகமாகக் கவனிக்க வேண்டிய அக்கறையில்லை.

* * * *

சுவாமி விவேகானந்தர் நினைவு மண்டபம்

*35 **கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி, விவேகானந்தர் பாறையின் மீது சுவாமி விவேகானந்தர் ஞாபகார்த்த மண்டபம் அமைக்க அரசு அனுமதி கொடுத்துள்ளதா?

(இ) ஆமென்றால், அதன் மதிப்பீடு எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The Government have granted permission to the Vivekananda Centenary and Rock Memorial Committee to erect a statue of Swami Vivekananda

*** Expunged as ordered by the Chair.

22nd January 1965]

திரு. எம். வி. கரிவேங்கடம்: அந்தத் தீர்மானம் எப்போது நிறைவேற்றப்படும்? அதற்கு ஏதாவது காலவரை நிர்ணயித்திருக்கிறார்களா?

கனம் திரு. வெ. ராமைய்யா: கலெக்டர் பரிசீலனை முடிந்து, ரெவின்யூ போர்ட் பரிசீலனைக்கு வந்து முடிந்தவுடன் அரசாங்கம் பரிசிலித்து முடிவு எடுக்க வேண்டும்.

திரு. எம். வி. கரிவேங்கடம்: சேலத்தை இரண்டாகப் பிரித்து வட சேலம் மாவட்டத்தை தனியாக அமைக்க வேண்டுமென்று இருக்கிறது. அதற்கு முன் சப்-தாலுகாக்கள் எல்லாம் தாலுகாக்களாக மாற்றப்படுமா என்பதை அறியலாமா?

கனம் திரு. வெ. ராமைய்யா: பொதுவாக ஒரு கேள்வி போட்டால் எல்லா விவரமும் சொல்லமுடியும்.

MR. SPEAKER: Questions 76 and 77 are postponed to tomorrow.

சர்வோதய மண்டல், வத்தலகுண்டு

*78. **கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா:** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா:

பஞ்சாயத்து யூனியன் பொது நிதியிலிருந்து ஒவ்வொரு யூனியனும் ரூ. 25 வீதம், மதுரை மாவட்டம், வத்தலகுண்டு, சர்வோதய மண்டலுக்கு நிதி உதவி செய்ய அரசாங்கம் உத்திரவு போட்டுள்ளார்களா?

THE HON. SRI S. M. A. MAJID: Permission has been accorded to Panchayat Union Councils to contribute a sum of Rs. 25 from their General Funds to the Tamil Nad Sarvodaya Mandal, Batlagundu, if they wish to do so, subject to the availability of surplus funds in their General Fund Accounts and subject to their obtaining necessary sanction of the Panchayat Union Council by means of a resolution.

திரு. எம். தண்டாயுதபாணி: அதுபோன்று கூட்டுமன்றங்கள் தீர்மானம் நிறைவேற்றி இதற்கு நிதி கொடுத்த பஞ்சாயத்து கூட்டு மன்றங்கள் நம் மாநிலத்தில் எவ்வளவு?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: அத்தகவல் இப்போது என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் சொல்கிறேன்.

கனம் சபாநாயகர்: கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ADJOURNMENT MOTIONS.

(1) ALLEGED FAILURE OF GOVERNMENT TO TAKE STEPS TO PREVENT HINDI BECOMING OFFICIAL LANGUAGE OF THE UNION.

MR. SPEAKER: Regarding the adjournment motion given notice of by the hon. Member Sri K. A. Mathialagan about the failure of this Government to impress upon the Central Government the need for amending the Constitution on the Hindi matter, I want to know what the recent occurrence is.

[22nd January 1965

SRI K. A. MATHIALAGAN : I will read my adjournment motion.

MR. SPEAKER : The Hon. Member need not read it. I have read it. What is the recent occurrence?

SRI K. A. MATHIALAGAN : The recent occurrence is the failure of Madras Government to impress on the Central Government the need for amending the Constitution so as to prevent the imposition of Hindi.

MR. SPEAKER : When was it decided to implement Hindi?

SRI K. A. MATHIALAGAN : It is being decided . . . .

MR. SPEAKER : The Constitution in 1950 decided to bring Hindi from January 26, 1965. How is it a recent occurrence?

SRI K. A. MATHIALAGAN : The present occurrence is the unrest and fear among the people. . . . . .

MR. SPEAKER : Where is the fear? What is the recent specific occurence?

SRI K. A. MATHIALAGAN : I mean the fear and unrest among the Tamils.

MR. SPEAKER : It is too vague. What is the recent occurrence? Unless the Hon. Member gives me a specific matter of recent occurrence, I do not think this can come under an adjournment motion.

SRI K. A. MATHIALAGAN : The recent occurrence is the failure of the Madras Government to make representation to the Centre.

MR. SPEAKER : Hindi was decided as official language to come into force on 26th January 1965. That decision was taken in 1950 according to Constitution. Afterwards there might have been so many efforts by so many people to amend it. What is the recent occurrence which necessitates the adjournment of the business of this House to discuss it? The same matter has been talked about so many times in this House.

SRI K. A. MATHIALAGAN : I submit to the Hon. Speaker that the recent occurrence is the failure of the Madras Government to represent this matter to the Centre and amend the relevant provision of Constitution and the consequent fear and unrest among the people.

MR. SPEAKER : On what date was the failure?

SRI K. A. MATHIALAGAN : What some other State Governments had done this Government had not done. West Bengal Government had prohibited the plying of buses carrying Hindi letters. That may be an act of commission. So far as this Government is concerned, it is an act of omission.

22nd January 1965]

MR. SPEAKER : What is the recent occurrence?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I may submit to you, Sir, that there is no other recent occurrence except perhaps the unfortunate decision of the D.M.K. to observe Republic Day as a ' Mourning Day '.

SRI K. A. MATHIALAGAN : That is a manifestation of public opinion. We do not dispute it. The decision of D.M.K. is a reflection of the opinion of 3½ crores of Tamils.

MR. SPEAKER : I am not concerned with reflection of public opinion and all those things. The point is that for an adjournment motion the matter should be of recent occurrence and it should be specific.

திரு. இசாம. அரங்கண்ணல்: தலைவர் அவர்களே, 1950-ல் இந்தி உடனடியாக ஆட்சிமொழியாக வராது என்று பண்டித நேரு அவர்கள் உறுதி மொழி அளித்திருந்தார்கள். . .

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்தி ஆட்சிமொழியாக வராது என்று பண்டித நேரு என்றைக்கும் உறுதிமொழி அளிக்க வில்லை.

MR. SPEAKER : That is all.

SRI K. A. MATHIALAGAN : The Madras Government has a clear responsibility to represent the grievances of the Tamilnad people to the Central Government. It is a failure on the part of the Government. 9-30 a.m.

MR. SPEAKER : I hold the adjournment motion out of order and withhold my consent to it.

(2) STAY OF PANCHAYAT ELECTIONS IN SINGANALLUR PANCHAYAT BLOCK.

திரு. மீ. கலியாணசுந்தரம்: சில பஞ்சாயத்துக்களில் தேர்தலை ஒத்தி வைக்கவேண்டும் என்று அரசாங்கம் உத்தரவு பிறப்பித் திருப்பதாக எனக்குத் தகவல்கள் வந்திருக்கின்றன. சிங்கநல்லூர் பஞ்சாயத்து பகுதிகளில் தேர்தல் நடத்துவதற்கான அறிக்கைகள் எல்லாம் வெளியிட்டபின்னும், இதற்கான நாமினேஷன்கள் எல்லாம் தாக்கல் செய்யப்பட்ட பின்னும் தேர்தலை நிறுத்தி வைக் கவேண்டும் என்று அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது. நாமி னேஷன் எல்லாம் தாக்கல் செய்த பின்னும் தேர்தலை நிறுத்தி வைப்பதற்கு தேர்தல் அதிகாரிகளுக்கோ அல்லது அரசாங்கத் திற்கோ அதிலும் கோர்டுகளுக்குக் கூட அதிகாரம் கிடையாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. 172-வது பிரிவு படி தேர்தல் அறிக்கை வெளியிட்ட பிறகு, தேர்தல் நடத்தவேண்டும் என்று முடிவு எடுத்த பிறகு தேர்தலில் குறுகிடக்கூடிய அதிகாரம் கோர்டுகளுக்குக்கூட கிடையாது என்றிருக்கும் போது, தேர்தலை